முதல்வர் முன்னிலையில் ஒப்பந்தம்

▶ சென்னையில் உள்ள வழிகாட்டி நிறுவனத்தில் முதல்வர் விஜய் முன்னிலையில் நேற்று, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை சார்பில் நடந்த நிகழ்ச்சியில், வழிகாட்டி நிறுவனத்திற்கும் தென் கொரியா முன்னணி வாகன உதிரிபாக நிறுவனமான மோட்டிவ் லிங்க் நிறுவனத்திற்கு இடையே 1500 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கிடும் வகையில், காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற்பூங்காவில் 300 கோடி ரூபாய் முதலீட்டில் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அருகில், அமைச்சர் கீர்த்தனா, தலைமை செயலாளர் சாய்குமார், தொழில் துறை செயலாளர் விஜயகுமார், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் தீபக் ஜேக்கப், மோட்டிவ் லிங்க் நிறுவன தலைமை செயல் அலுவலர் கிம் கி ஹான், நிறுவன இந்தியாவுக்கான மேலாண்மை இயக்குநர் ஹாங் சாங் ஜூன், மேலாளர்கள் பித்யா ஷர்மா, அதுல் ஷாக்யா.

முதல்வர் விஜய் ஆக.3ம் தேதி கர்நாடகா செல்வது உறுதி

முதல்வர் டி.கே.சிவகுமாருடன் ஹெலிகாப்டரில் பயணம் செய்து மேகதாது செல்வதாகவும் தகவல்

சென்னை, ஜூலை 31: முதல்வர் விஜய் ஆகஸ்ட் 3ம் தேதி கர்நாடகா செல்வது உறுதியாகியுள்ளது. அங்கு முதல்வர் டி.கே.சிவகுமாருடன் ஹெலிகாப்டரில் பயணம் செய்து மேகதாது பகுதியையும் பார்வையிடுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

காவிரி நதிநீர் பங்கீட்டு பிரச்னை தமிழ்நாடு - கர்நாடகா இடையே நூற்றாண்டுகளுக்கு மேலாக தொடர்ந்தாலும், மேகதாது அணை பிரச்னை என்பது கடந்த 10 ஆண்டுகளாக இருந்து வருகிறது. இந்நிலையில், காவிரி படுகையில் 5வது அணையாக மேகதாதுவை கட்டி முடிக்க கர்நாடக அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அதை தடுக்க வேண்டும் என்று தமிழக எதிர்க்கட்சிகள், விவசாய அமைப்புகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. மேகதாதுவில் அணை கட்டினால் தமிழக டெல்டா பகுதிகள் பாலைவனமாகி விடும், 20 மாவட்டங்களில் குடிநீர் பிரச்னை ஏற்படும் என்று கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். ஆனால், கர்நாடக அரசும், முதல்வர் டி.கே.சிவகுமாரும் மேகதாது பகுதியில் அணை கட்டுவதற்கான பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். இதனால் கடந்த சில நாட்களாக இரண்டு மாநிலத்தின் எல்லை பகுதியில் பதற்றமான சூழ்நிலை உள்ளது.

இதற்கிடையே, தமிழக முதல்வர் விஜய் - கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் ஆகியோர் ஆகஸ்ட் 3ம் தேதி பெங்களூருவில் சந்தித்து பேச இருப்பதாக தகவல்கள் வெளியானது. இதை தொடர்ந்து, உச்ச நீதிமன்ற தீர்ப்பு மற்றும் காவிரி நதிநீர் ஆணையத்தின் தீர்ப்பு தமிழகத்திற்கு சாதகமாக இருப்பதால், இந்த சந்திப்பில் பங்கேற்கக்கூடாது என்று தமிழக முதல்வர் விஜய்க்கு, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, பாமக தலைவர் அன்புமணி உள்ளிட்ட பல அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் விவசாய அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. மேலும், அனைத்துக்கட்சி கூட்டத்தை கூட்டவும் திமுக உள்ளிட்ட கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. பல்வேறு கட்சி தலைவர்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் விஜய் - டி.கே.சிவகுமார் சந்திப்பு நடைபெறுமா என்ற கேள்வி எழுந்தது. இந்நிலையில், இருமாநில முதல்வர்கள் சந்திப்பு நடப்பது தற்போது உறுதியாகியுள்ளது. இதற்காக, ஆகஸ்ட் 3ம் தேதி காலை சென்னையில் இருந்து தனி விமானத்தில் முதல்வர் விஜய் பெங்களூரு செல்ல இருக்கிறார். அன்று பிற்பகல் 12 மணிக்கு கர்நாடக தலைமைச் செயலகமான விதான் சவுதாவில் கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமாரை சந்தித்து பேசுகிறார். அதன்பின்னர், இருவரும் ஹெலிகாப்டரில் மேகதாது அணை அமைய உள்ள இடத்தையும், கர்நாடகாவில் உள்ள காவிரி பாசன பகுதிகளையும் பார்வையிட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. எதிர்ப்புக்கு மத்தியில் நடைபெறும் இந்த இருமாநில முதல்வர்கள் சந்திப்பில் என்ன முடிவு எட்டப்படபோகிறது என்ற எதிர்பார்ப்பு நாடு முழுவதும் ஏற்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

நீட் எதிர்ப்பு போராட்டத்தை கண்டு

ஒன்றிய பாஜ அரசைவிட தவெக அரசு தான் அதிகம் மிரளுகிறது

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்

சென்னை, ஜூலை 31: திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட சமூகவலைத்தளப் பதிவு:

நீட், இடபிள்யூஎஸ் இட ஒதுக்கீடு எதிர்ப்பு போராட்டத்தைக் கண்டு ஒன்றிய பா.ஜ. அரசைவிட த.வெ.க. அரசுதான் அதிகம் மிரளுகிறது. பெரியாரை கொள்கை தலைவர் என சொந்தம் கொண்டாடும் த.வெ.க. அரசு பெரியார் திடலிலேயே போலீசாரை குவித்திருப்பது ஏன்?. திராவிடர் கழகத்தின் இருசக்கர வாகன பரப்புரை பயணத்துக்கு கடைசி நிமிடத்தில் அனுமதி மறுத்ததற்கு என்ன காரணம்? யாரின் அழுத்தத்துக்கு பணிந்து இதை செய்கிறார்கள்?.

கடந்த காலங்களில் மிக அமைதியான முறையில், அறவழியில், கண்ணியத்தோடு இதே போராட்டங்களை தாய்க்கழகமாம் திராவிடர் கழகம் கட்டுப்பாட்டுடன் நடத்திக் காட்டியிருக்கிறது. அத்தகைய இயக்கத்தின் பரப்புரை பயணத்தை தடை செய்வது வன்மையான கண்டனத்துக்குரியது. சிவப்பும் மஞ்சளும் சேர்ந்தால் கிடைப்பது காவி என்பது இதன் மூலம் உறுதியாகிவிட்டது. அடக்குமுறை அரசியலை கைவிட்டு ஆசிரியரின் பரப்புரை பயணத்துக்கு உரிய அனுமதியை த.வெ.க. அரசு வழங்க வேண்டும்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் சமூகவலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

பத்திரிகையாளர்கள் மீது கொடூர தாக்குதல் நடத்திய

சோளிங்கர் தவெக எம்எல்ஏ கபிலை கைது செய்ய வேண்டும்

சென்னை பத்திரிகையாளர் மன்றம் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூலை 31: ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் பகுதியில் உள்ள ஒரு திரையரங்கில் தமிழக முதல்வர் நடித்த ஜனநாயகன் திரைப்படம் வெளியானது. அந்த திரைப்படத்தை சோளிங்கர் தவெக எம்எல்ஏ கபில், தனது ஆதரவாளர்களுடன் பார்த்துவிட்டு வெளியே வந்தார். அப்போது, யூடியூபர் ஒருவர் திரைப்படம் குறித்து எம்எல்ஏ கபிலிடம் கருத்து கேட்டுள்ளார்.

அப்போது எம்எல்ஏ கபில், யூடியூபர் சிவாவை தாக்க முயன்றுள்ளார். இது குறித்து வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவியது. அதை தொடர்ந்து மறுநாள் எம்எல்ஏ கபில் மற்றும் அவரது சகோதரர் தனஞ்செழியன் ஆகியோர் யூடியூபர் சிவா வீட்டிற்கு சென்று தாக்கியுள்ளனர். இதுகுறித்து செய்தி வெளியானதை தொடர்ந்து தினமலர் நிருபர் கல்யாணசுந்தரம் மற்றும் தினகரன் நிருபர் அரங்கநாதன் ஆகியோர் சென்றுள்ளனர். அப்போது எம்எல்ஏ கபில் தனது சகோதரர் உள்பட 10 பேர் சேர்ந்து இரண்டு நிருபர்களையும் கடுமையாக தாக்கினர்.

இதில் 2 பேரும் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர்.

இதையடுத்து தவெக எம்எல்ஏ கபில் பத்திரிகை சுதந்திரத்தை நெரித்து தாக்குதல் நடத்தியதற்கு ‘சென்னை பத்திரிகையாளர் மன்றம்’ உள்ளிட்ட பத்திரிகையாளர்கள் சங்கங்கள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தன.

இந்நிலையில், பத்திரிக்கையாளர்கள் மீது தாக்குதல் நடத்திய சோளிங்கர் தவெக எம்எல்ஏ கபில் மீது வழக்கு பதிவு செய்து அவரை கைது செய்ய கோரி நேற்று சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள ‘சென்னை பத்திரிகையாளர் மன்றம்’ முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

செந்தில் பாலாஜிக்கு எதிரான வழக்கு

உச்ச நீதிமன்ற நீதிபதி வி.மோகனா திடீர் விலகல்

புதிய அமர்வுக்கு விசாரணை மாற்றம்

சென்னை, ஜூலை 31: கடந்த அதிமுக ஆட்சி காலத்தில் போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜி வேலைக்கு பணம் பெற்ற விவகாரத்தில் தொடரப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் அவருக்கு ஜாமீன் வழங்கி உள்ளது. இந்த நிலையில் செந்தில் பாலாஜி தொடர்பான வழக்கு அனைத்தையும் ஒன்றாக இணைத்து விசாரிப்பதற்கு எதிராக ஒய்.பாலாஜி என்பவர் தொடர்ந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது.

இந்நிலையில் இந்த வழக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதிகள் ஜாய்மால்யா பாக்ஷி மற்றும் வி.மோகனா ஆகியோர் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் ஒய்.பாலாஜி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், “இந்த விவகாரத்தில் இருக்கும் முக்கிய பிரச்னையே செந்தில் பாலாஜிக்கு எதிரான வழக்குகள் அனைத்தையும் ஒன்றாக இணைப்பதுதான். ஏனென்றால் இந்த வழக்கில் 2000 பேர் குற்றம் சாட்டப்பட்டவர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் 700 பேர் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். இதனால் விசாரணையை தொடங்கவே முடியாத சூழ்நிலை உள்ளது. எந்தவொரு சாட்சியிடமும் குறுக்குவிசாரணை நடத்த முடியவில்லை. எனவே இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் தலையிட்டு ஒரு அறிவுறுத்தலுடன் கூடிய உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இதை தொடர்ந்து அப்போது குறுக்கிட்ட அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஹரிப்பிரியா, “இந்த வழக்கில் புதிதாக சிறப்பு அரசு வழக்கறிஞர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அதேபோன்று கூடுதலாக ஒரு சிறப்பு அரசு வழக்கறிஞரும் நியமனம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே வழக்கை வேறு தேதிக்கு ஒத்திவைக்க வேண்டும்” என்று தெரிவித்தார்.

இது போன்ற நிலையில் நீதிபதி வி.மோகனா ஒரு அறிவிப்பை வெளியிட்டார். அதில், “நான் வழக்கறிஞராக பணியாற்றிய போது மனுதாரர் சார்பில் ஆஜராகி வாதங்களை முன் வைத்துள்ளேன். எனவே தொழில்முறை தர்மத்தின் அடிப்படையில் வழக்கிலிருந்து விலகுகிறேன். இது தான் சரியான ஒன்றாக இருக்கும்” என்று தெரிவித்தார்.

இதையடுத்து இந்த வழக்கின் விசாரணையை புதிய அமர்வு விசாரிக்கும் என்று தெரிவித்த தலைமை நீதிபதி சூர்ய காந்த், வழக்கை ஒத்திவைத்தார்.

செந்தில் பாலாஜி முன்ஜாமீன் கேட்ட வழக்கு உச்ச நீதிமன்றம் இன்று விசாரணை

டாஸ்மாக் முறைகேடு வழக்கில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தாக்கல் செய்த முன்ஜாமீன் மனுவை சென்னை உயர் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்திருந்தது. இதையடுத்து இந்த நடவடிக்கைக்கு எதிராகவும், உயர் நீதிமன்ற உத்தரவுக்கு தடை விதித்து தனக்கு முன்ஜாமீன் வழங்க வேண்டும் என்றும் செந்தில் பாலாஜி தாக்கல் செய்திருந்த மேல்முறையீட்டு மனு இன்று அவசர வழக்காக பட்டியலிட்டு விசாரணை நடத்துவதாக உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் உத்தரவிட்டுள்ளர். இந்த விவகாரத்தில் தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத்துறை கேவியட் மனு நேற்று தாக்கல் செய்தது.

அசாதாரண சூழல்களை தவிர மற்ற நேரங்களில்

பெல்லட் குண்டுகளை பயன்படுத்தக் கூடாது

உச்ச நீதிமன்றம் அதிரடி

புதுடெல்லி, ஜூலை 31: நீட் வினாத்தாள் கசிவுக்கு எதிராக டெல்லியில் கரப்பான் பூச்சி இயக்கத்தின் சார்பாக போராடிய மாணவர்களை கட்டுப்படுத்தும் விதமாக போலீசார் ரப்பர் குண்டு துப்பாக்கியால் சுட்டும் கலைத்தனர். இந்த நிலையில் போராட்டங்களின் போது பெல்லட் குண்டுகளை பயன்படுத்த தடை விதிக்க வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனு உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சூர்ய காந்த் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்த போது பிறப்பித்த உத்தரவில், “டெல்லி மாணவர்கள் போராட்டத்தில் காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்க வேண்டும். குறிப்பாக பெல்லட் குண்டுகளை முக்கியமான அசாதாரண சூழல்களை தவிர மற்ற நேரங்களில் கண்டிப்பாக பயன்படுத்தக் கூடாது. குறிப்பாக டெல்லி போராட்டத்தின் போது மாணவர்கள் மீது எந்தவிதமான ஆயுதம் பயன்படுத்தப்பட்டது என்பது குறித்து காவல்துறை விளக்கமளிக்க வேண்டும். பெல்லட் குண்டுகள் பயன்படுத்தப்பட்ட விவகாரத்தை உச்ச நீதிமன்றம் விரிவாக விசாரணை நடத்த தயாராக இருக்கிறது என்று திட்டவட்டமாக தெரிவித்த நீதிபதிகள், வழக்கின் விசாரணையை ஒத்திவைத்தனர்.

நமது நாகர்கோவில் மாநகரில்
VIJAY'S INFO MEDIA · VIJAYS GLOBAL EDUCATION
MBBS / BDS & VETERINARY
SPOT ADMISSION EXPO
on 02 August, 2026 Sunday | 10AM
அனுமதி இலவசம்
இடம் : ஹோட்டல் உடுப்பி இன்டர்நேஷனல், வடசேரி பேருந்து நிலையம் அருகில், நாகர்கோவில்.
NEET JUST PASS CAN BECOME DOCTOR
இப்போது வெளிநாட்டில் படிக்கும் மாணவர்களிடம் நேரடியாக பேசலாம்
10-க்கும் மேற்பட்ட உள்நாட்டு & வெளிநாட்டு கல்லூரியின் நிறுவனர் மற்றும் முக்கிய பிரதிநிதிகளை நேரடியாக சந்திக்கலாம்
UPTO 1,00,000 SCHOLARSHIP
EDUCATION LOAN GUIDANCE
வருடம் 3 லட்சத்தில் MBBS படிக்கலாம், 4 லட்சத்தில் Veterinary படிக்கலாம்
குறைந்த இடங்களே உள்ளன! முன்பதிவு அவசியம்
இலவச பெயர் முன்பதிவிற்கு : 73394 87731
R.R College of veterinary & animal science, Rajasthan · M.B VETERINARY COLLEGE · FERGANA · Bharath · MAHALA VETERINARY COLLEGE · ANDIJAN STATE MEDICAL UNIVERSITY · UNIVERSITY OF PERPETUAL HELP · AKASH INSTITUTE of Medical sciences & Research Centre Bangalore

சுவாதீன அறிவிப்பு

எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிட்.
CIN: U67100MH2007PLC174759
ரீடெய்ல் மைய & பதிவு அலுவலகம்: எடெல்வீஸ் இல்லம், சிஎஸ்டி சாலை தொலைவு, கலினா, மும்பை 400098

பிற்சேர்க்கை IV [விதி- 8(1)] சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்காக)

இவ்வாறிருக்க, எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரி பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் (சட்டம்), 2002 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் (விதி 3) உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கோரிக்கை அறிவிப்பு வழங்கி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.
அதன்பிறகு, கடனீட்டு கடன்தாரர் சர்ஃபாசி சட்டம், 2002 இன் பிரிவு 5 கீழ் செய்து கொண்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தத்தினை பின்பற்றி இஏஆர்சி பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் சொந்த/அதன் திறனில் செயல்படும் எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடுக்கு நிதிச் சொத்துகளை உரிமை ஒதுக்கீடு செய்துள்ளது. இஏஆர்சி ஆனது கடன்தாரரால் பெறப்பட்ட நிதி உதவி தொடர்பான கீழ்க்காணும் கடனீட்டு உரிமைகள், உத்திரவாதங்கள், அடமானங்கள் ஆகியவற்றுடன் நிதிச் சொத்துகள் தொடர்பான கடனீட்டு கடனீந்தோரின் அனைத்து உரிமங்கள், உரிமைப்பத்திரம் மற்றும் உரிமைகள் ஆனது இஏஆர்சி-க்கு வந்தடைந்துள்ளன. மேலும் இஏஆர்சி ஆனது கடனீட்டு கடனீந்தோராக அதன் அனைத்து உரிமைகளை செயல்படுத்துகிறது.
கடன்தாரர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளதைத் தொடர்ந்து, இதன்மூலம் கடன்தாரர்(கள்), உப கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்ட எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரி கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் பிரிவு 13 இன் துணைப் பிரிவு (4) கீழ் உள்ள விதி 8 இன்படி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை (ஒவ்வொரு சொத்திற்கும் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில்) சுவாதீனம் செய்துள்ளார்.

வ. எண்.	கடன் கணக்கு எண்& கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர் (கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு தேதி & தொகை	பொறுப்பாட்சி விவரங்கள்	சுவாதீன நாள்	அடையாளப்பூர்வ/ கையக சுவாதீனம்
1	கடன் கணக்கு எண்: 2365342 1) M/s. தனலட்சுமி கிப்ட் சென்டர் (கடன்தாரர்), 2) திருமதி மேரி ஜனத் (உப-கடன்தாரர்), 3) திரு. E. ஸ்டாலின் (உப-கடன்தாரர்)	07.06.2022 & ₹ 21,71,443.76	எச்டிஎஃப்சி பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் & இஏஆர்சி ட்ரஸ்ட் எஸ்சி - 410	29.07.2026	கையக சுவாதீனம்

அசையா சொத்தின் விவரம்: கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பதிவு மாவட்டம், முன்சிறை சார் பதிவு அலுவலகம், விளவங்கோடு வட்டம், கீழ்குளம் கிராமம், O.S.No.509/4B, O.S.No.2154, புதிய S.No.450/13, பட்டா எண். 7794 இல் அடங்கிய 1786 சதுர அடி பரப்பளவு உள்ள சொத்து. எல்லைகள் வடக்கு: ஆர்தர் சுவாதீனத்தில் உள்ள சொத்து, கிழக்கு: பாதை, தெற்கு: ராஜன் சுவாதீனத்தில் உள்ள சொத்து, மேற்கு: ராஜன் சுவாதீனத்தில் உள்ள சொத்து.

கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு கால அவகாசம் கிடைக்கப்பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13 இன் உட்-பிரிவு (8) விதிமுறைகள் கடன்தாரர் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன. கடன்தாரருக்கு குறிப்பிட்டு மேலும் பொதுமக்களுக்கு பொதுவாக இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம் மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின் வசூலுக்கு உட்படும்.

இடம்: தமிழ்நாடு
தேதி: 31.07.2026
ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி,
எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்
Edelweiss Asset Reconstruction

மக்களவையிலும் மசோதா நிறைவேற்றம்

வந்தே மாதரம் பாடலை இனி அவமதித்தால் 3 ஆண்டு சிறை

திமுக கடும் எதிர்ப்பு

புதுடெல்லி, ஜூலை 31: தேசிய பாடலான வந்தே மாதரத்தை அவமதிப்பதை தண்டனைக்குரிய குற்றமாக்கும் மசோதா மாநிலங்களவையை தொடர்ந்து மக்களவையில் நேற்று நிறைவேற்றப்பட்டது. கடும் அமளிக்கு இடையே நடந்த குறுகிய விவாதத்தில் மசோதாவுக்கு திமுக கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

கடந்த 1971ல் கொண்டுவரப்பட்ட தேசிய கவுரவ அவமதிப்பு சட்டத்தின் படி, தேசியக் கொடி, தேசிய கீதம் மற்றும் அரசியலமைப்பு சட்டம் ஆகியவற்றை அவமதித்தால் 3 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்படும். இதில் தேசிய பாடலான வந்தே மாதரத்தையும் சேர்க்கும் வகையில், தேசிய கவுரவ அவமதிப்பு தடுப்பு திருத்த மசோதா மாநிலங்களவையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து, இந்த திருத்த மசோதா மக்களவையில் கடும் அமளிக்கு மத்தியில் நேற்று தாக்கல் செய்யப்பட்டு குறுகிய விவாதம் நடந்தது.

விவாதத்தில் பேசிய திமுக எம்பி கனிமொழி, ‘‘தேசியவாதம் என்ற போர்வையில் கொண்டுவரப்படும் இந்துத்துவா அஜெண்டா இது. கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது. சட்டத்தின் மூலம் தேசியவாதத்தை நீங்கள் திணிக்க முடியாது. இப்பாடல் நாட்டின் மதச்சார்பின்மைக்கு முரணாக உள்ளது.

நாட்டின் அரசியலமைப்பை உருவாக்கிய முன்னோர்கள் இப்பாடலின் 2 சரணங்களை போதும் என்ற கருத்தை கொண்டிருந்தனர்.

ஆனால் இன்று, அனைத்து 6 சரணங்களையும் பாடுவதை கட்டாயமாக்கி, அவ்வாறு பாடாததை ஒரு குற்றமாகக் கருதுவதன் மூலம் நாட்டைப் பிளவுபடுத்த நீங்கள் முயற்சிக்கிறீர்கள்’’ என கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

இரு எம்பிக்கள் மட்டுமே விவாதத்தில் பேசிய நிலையில் அதற்கு பதிலளித்து பேசிய ஒன்றிய உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய், “காங்கிரஸ் தனது 76 ஆண்டு கால ஆட்சியில் வந்தே மாதம் பாடலுக்கு உரிய மரியாதையை அளித்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு பதிலாக திருப்திபடுத்தும் அரசியலில் ஈடுபட்டது. மோடி அரசு தேசிய பாடலுக்கு அது பெற தகுதியான உரிய மரியாதையை அளித்து வருகிறது. ஒரே இந்தியா, சிறந்த இந்தியா என்ற நோக்கத்திற்கு வந்தே மாதரம் பாடலின் முழுமையான வடிவம் நமக்கு தேவை” என்றார்.

பின்னர், எதிர்க்கட்சிகளின் அனைத்து திருத்தங்களும் நிராகரிக்கப்பட்டு குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதா நிறைவேற்றப்பட்டது. அப்போது திமுக எம்பி ஆ.ராசா எதிர்ப்பு தெரிவித்து ஆவணத்தை கிழித்து அவையின் மையப்பகுதியில் வீசினார்.

இதன் மூலம், தேசிய கவுர அவமதிப்பு தடுப்பு மசோதா இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டதன் மூலம் ஜனாதிபதி ஒப்புதலுடன் சட்டமாக்கப்படும். இனி தேசிய கீதத்தை போல தேசிய பாடலான வந்தே மாதரம் பாடுவதை திட்டமிட்டு தடுத்தாலோ, இடையூறு செய்தாலோ 3 ஆண்டு வரை சிறை தண்டனை விதிக்கப்படும். இந்த மசோதா நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, நேற்றைய அலுவல்கள் முடித்துக்கொள்ளப்பட்டு மக்களவை இன்றைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வினாத்தாள் கசிவு தடுப்பு திருத்த மசோதா

மாநிலங்களவையிலும் நிறைவேறியது

புதுடெல்லி, ஜூலை 31: வினாத்தாள் கசிவு தடுப்பு திருத்த மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, மாநிலங்களவையில் நேற்று நிறைவேறியது.

நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்தை தொடர்ந்து பொதுத்தேர்வுகள் முறைகேடு தடுப்பு சட்டத்தை மேலும் கடுமையாக்கும் மசோத மக்களவையில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாவை மாநிலங்களவையில் ஒன்றிய அமைச்சர் ஜிதேந்திர சிங் நேற்று தாக்கல் செய்தார்.

வினாத்தாள் கசிவு விவகாரத்தில் ஒன்றிய அரசு சகிப்புத்தன்மையற்ற அணுகுமுறை கொண்டிருப்பதை இந்த மசோதா உறுதிப்படுத்துவதாக அமைச்சர் ஜிதேந்திர சிங் கூறினார். பின்னர் விவாதத்தில் பங்கேற்று பேசிய மாநிலங்களவை எதிர்க்கட்சி தலைவர் மல்லிகார்ஜூன கார்கே, “முக்கியமான இந்த மசோதா மீதான விவாதத்தின் போது அவையில் பிரமதர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் இல்லாதது கண்டிக்கத்தக்கது. இவ்வளவு கொந்தளிப்பான சூழல் நிலவியும் அவர்கள் இருவரும் இது வரை வாய் திறக்கவில்லை. யாராவது உங்கள் வாயை தைத்து விட்டார்களா? போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது காவல் துறையின் அத்துமீறலுக்கு அமித்ஷா தான் பொறுப்பு. நாட்டின் நலன் கருதி, அந்த அவமானத்தை அவர் தாங்கியிருக்க வேண்டும். மாணவர்கள் அரசுக்கு ஏற்கனவே ஒரு பாடத்தை கற்பித்துள்ளார்கள். அடுத்து, அதைவிடப் பெரிய பாடத்தை மீண்டும் கற்பிப்பார்கள்’’ என ஒன்றிய அரசை எச்சரித்தார்.

நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என திமுக எம்பி திருச்சி சிவா வலியுறுத்தினார். விவாதத்தில் பேசிய அவர், “மாணவர்களை குறைத்து மதிப்பிடாதீர்கள். பெல்லட் துப்பாக்கிகள், தடியடி, கண்ணீர் புகை குண்டுகளை பயன்படுத்தி அவர்களை கையாள முயற்சிக்காதீர்கள்’’ என்றார். வினாத்தாள் கசிவு பிரச்னை அதிகரிப்பதற்கு பயிற்சி மையங்களே காரணம் என குற்றம்சாட்டி அதிமுக எம்பி தம்பிதுரை, அவற்றை ஒழுங்குபடுத்த அல்லது ஒழிக்க தனி சட்டம் இயற்ற வேண்டுமென வலியுறுத்தினார்.

தொடந்து விவாதம் நடந்தது. அமித்ஷா அவைக்கு வராததால் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்த பிறகு நடந்த வாக்கெடுப்பில் மசோதா மாநிலங்களவையிலும் நிறைவேறியது.

எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

முன்னதாக நேற்று காலை மாநிலங்களவை கூடியதும், மாணவர்கள் போராட்டத்தில் காவல்துறையின் ஒடுக்குமுறை குறித்து அமித்ஷா பதிலளிக்க வலியுறுத்திய எதிர்க்கட்சிகள், அவர்களின் கோரிக்கை ஏற்கப்படாததால் காங்கிரஸ் தலைமையில் வெளிநடப்பு செய்தனர்.

மூத்த அமைச்சர்களுடன் பிரதமர் மோடி அவசர ஆலோசனை

புதுடெல்லி, ஜூலை 31: பிரதமர் மோடி தலைமையில் பாதுகாப்புக்கான அமைச்சரவை குழு கூட்டம் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில் தேசிய பாதுகாப்பு விவகாரம், மேற்காசிய நிலவரம், கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, திரவ எரிவாயு, உரங்களின் உள்நாட்டு இருப்பு மற்றும் குறுகிய கால அல்லது நீண்ட கால விநியோகங்கள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மேலும் சண்டை நடக்கும் இடங்களில் வசிக்கும் இந்தியர்களின் பாதுகாப்பு குறித்தும் பிரதமர் ஆய்வு செய்தார் என்று வட்டாரங்கள் தெரிவித்தன.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம் அலகு: கிங்ஸ்டோன்பார்க் கமர்சியல் காம்ப்ளெக்ஸ், எண்.19/1, புதூர் நெடுஞ்சாலை, ராமலிங்க நகர், உறையூர், திருச்சி-620 017 தமிழ்நாடு.
மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.
இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 & 9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.
கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்-ஏலம் மூலமாக 31.08.2026 தேதியன்று விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும்.
விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
8	கடன் எண்: HF0561H21100021 தயா சிங் ஜபாசிங், (கடன்தாரர்), ட்ரெனி S (உப கடன்தாரர்	அறிவிப்பு தேதி: 10-09-2025 10-09-2025 தேதியன்று மொத்த நிலுவைத் ரூ 1266599 (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து அறுபத்தாறு ஆயிரத்து ஐந்து நூற்றுத் தொண்ணூற்று ஒன்பது மட்டும்) அத்துடன் ஆண்டொன்றுக்கு 15.85% கூடுதல் வட்டியும்.	கையக	மறு சர்வே எண்: 658/2 (தற்போது 658/24), பழைய சர்வே எண் 2527, கல்லென்கோடு (தற்போது கொல்லன்கோடு பிஜே கிராமம், விளவங்கோடு தாலுகா, கொல்லன்கோடு துணைப் பதிவாளர் அலுவலகம், மார்த்தாண்டம் பதிவு மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம்) ஆகிய இடங்களில் அமைந்துள்ள, 4 சென்ட் அளவிலான அந்த நிலப்பகுதி. எல்லைகள்:- (VAO சான்றிதழின்படி) வடக்கு:- ஜெயசிங்கிற்குச் சொந்தமான சொத்து, கிழக்கு:- கனகராஜிக்கு சொந்தமான சொத்து, தெற்கு:- சாமுவேலுக்கு சொந்தமான சொத்து, நடைபாதை மேற்கு:- ஜோசப்ராஜிக்கு சொந்தமான சொத்து.	Rs. 2471595.00/- (ரூபாய் இருபத்து நான்கு இலட்சத்து எழுபத்து ஒராயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்)	Rs. 247159.50/- (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பது ஏழாயிரத்து நூற்று ஐம்பத்தொன்பது மற்றும் ஐம்பது பைசா மட்டும்)	28-08-2026 Before 5 PM	10,000/-	10-08-2026 (11AM – 4PM)	31-08-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.
ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்-ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா-122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்-ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரஸீட்ஸ் A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code- ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பான்ஞ்ச்சில் டெக்னிகல் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்-411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 28.08.2026 தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்-ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை அவற்றின் மூல பிரதியை முகவரி: கிங்ஸ்டோன்பார்க் கமர்சியல் காம்ப்ளெக்ஸ், எண்.19/1, புதூர் நெடுஞ்சாலை, ராமலிங்க நகர், உறையூர், திருச்சி-620 017(த.நா), மேலும் கைபேசி எண். +91 9597907666, மின்னஞ்சல் முகவரி baskaran.soudararajan@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்-ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.
கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்-2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப - கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 30 நாட்கள் (முப்பது) அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.
உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.
நாள்: 31.07.2026, இடம்: தமிழ்நாடு
ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்